ரேஷன் எடுத்துக் கொண்டு வருகிறது. நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அதனுடைய ஆதரைஸ்டு கண்ட்ரோலராக நியமித்திருக்கிருர்கள். அதன்பிறகுதான் ஒரு மில்லை எற்று நடத்துகிறோம். அதற்குப் பிறகு அவர்கள் 51 சதவிகிதம் தருகிருர்கள், நாம் 49 சதவிகிதம் போடுகிறோம். நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் தலைவர் இந்த விவரத்தைத் தெரிந்து பேசுகிருரா அல்லது தெரியாமல் பேசுகிருரா என்று தெரியவில்லை, அவர்களே மத்திய சர்க்காரிடத்தில் விசாரித்து விட்டுப் பேசியிருக்கலாம். ஒரு மாநில முதலமைச்சர் சொல்கிருர்களே என்று டெல்லிக்குச் சென்று விசாரித்து விட்டுப் பேசியிருக்கலாம். ஆனல் அவர்கள் தொடர்ந்து அதே விதத்தில் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.

இதில் அரசியல் நோக்கமும் இருக்கலாம், அதைப் பற்றி நாங்கள் கவலைப்படத் தயாராக இல்லை. இந்தப் பிரச்சினைப் பற்றி சம்பந்தப்பட்ட தலைவர்கள் மிகுந்த அக்கறையோடு விளக்கங்களைக் கேட்டார்கள். மத்திய அரசுக்கு நாமும் சொல்லியிருக்கிறோம். இப்போது எடுத்த முடிவுப்படி ஆறு ஆலைகளில் நான்கு ஆலைகளை நாம் எடுத்திருக்கிறோம். அதே முறையில் எடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள், நாங்களும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் போராட்டம் திரும்பப் பெறப் பட்டிருக்கிறது.

Legal-retainors for Textile Corporation

* 247 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether Legal-retainers have been appointed for the Textile Corporation in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Allowances to unemployed persons

* 248 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government to pay allowances to the unemployed persons registered with the employment Exchanges?

மாண்புமிகு திரு. செ மாதவன்: இல்லை.

Study on jurisdiction of Courts

* 249 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government have constituted any Committee to study the jurisdiction of subordinate Courts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்), குற்றவியல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பினைக் குறித்து மாநிலம் முழுவதிலும் விரிவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ள குழு ஒன்றினை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்குழுவில் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரும், மாவட்ட-செஷன்ஸ் நீதிபதி பதவித்தரத்தில் உள்ள முதுநிலை அதிகாரி ஒருவரும் உள்ளனர். சட்டத்துறை, அரசு உதவிச் செயலாளர், பதவித்தரத்தில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி ஒருவர் இக்குழுவிற்கு உதவி புரிவார். அவர் இக்குழுவின் செயலாளராகப் பணியாற்றுகிறார். கருவூல-கணக்கு இயக்குநராகிய திரு. டி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ். அவர்களும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாகிய திரு. எ. வரதராசன் அவர்களும் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு 11—12—1970-லிருந்து செயல்படத் தொடங்கியது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரை எத்தக் கால அளவுக்கு முன்னதாகக் கிடைக்க வேண்டுமென்று வரையறுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

THIRU N. GANAPATHY : May I know whether this Committee has been asked to send recommendation in respect of territorial or pecuniary jurisdiction of courts?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் இப்போது எண்ணி வருவது மாவட்ட அளவில் உள்ள நீதிமன்றங்களை எந்தெந்த இடத்தில் அமைக்க முடியும், நீதிமன்ற எல்லைகளை எப்படி மாற்றியமைக்க முடியும், அதிகமான நீதிமன்றங்கள் எங்கே தேவைப்படுகின்றன என்ற அளவிலே பரிசீலிக்கப் படுகின்றன.

பெண் நீதிபதிகள்

*250 வினு—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் தற்போது எத்தனை பெண்கள் மாநில நீதித்துறையில் நீதிபதிகளாக உள்ளனர்?

(இ) எந்தெந்த மாவட்டங்களில்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இம்மாநிலத்தில் நீதித் துறையில் இரண்டு பெண்மணிகள் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் ஒருவர், மாவட்ட முன்சீப்பாகவும் மற்றொருவர் தற்காலிக சப்-மாஜிஸ்ட்ரேட் டாகவும் உள்ளனர். திருமதி எ. சுப்புலட்சுமி, மதுரை மாவட்டம் மதுரை நகரில் இரண்டாவது மாவட்டக் கூடுதல் முன்சீப்பாக பணியாற்றுகிறார். திருமதி சி. ஆர். ராமாயி, வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் தற்காலிக சப்-மாஜிஸ்ட்ரேட் T ஆகப் பணியாற்றுகிறார்.

திரு. பெ. மலைச்சாமி: ஆசிரியர் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் அதிகமான பெண்கள் வருகிறார்கள். ஆனால் வழக்குரைஞர் தொழிலை நடத்துவதற்கு அதிகமான பெண்கள் வருவதில்லை. ஒருசில பெண்கள் வக்கீலுக்குப்